28th February 969]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) & (இ) ஆம். சென்னை, மலைச்சாலையில் (M unt Road) உள்ள அரசாங்க மாளிகையில் மனை ஒப்படை செய்ய அல்லது குத்தகைக்கு விடுமாறு வேண்டி சென்னைப் பத்திரிகை நிருபர்கள் சங்கத்திடமிருந்து 13—8—1968 தேதியிட்ட முறையீடு ஒன்று கிடைத்துள்ளது. இது (கட்டிடத்) தலைமைப் பொறியாளருக்கும் வருவாய்த்துறை வாரியத்துக்கும் கருத்துரை வேண்டி அனுப்பப்பட்டுள்ளது.

மிஸ்டர் சேர்மன் : கனம் உறுப்பினர் திரு. எம். எத்திராஜுலு முதலில் கேட்ட கேள்வியை இப்போது கேட்கலாம்.

திரு. எம். எத்திராஜுலு : காலம் சென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர்களை அழைத்து 'நானும் ஒரு பத்திரிகையாளன்தான், உங்களுக்கு சங்கம் அவசியம்தான்' என்று கூறியிருக்கிறார்கள். அவர் சொல்லியதன் பேரில் இப்போது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மாண்புமிகு அண்ணா அவர்கள் மனை ஒதுக்குவதற்குத் தேர்தெடுக்கப்பட வேண்டுமென்றும் வேறு யாருக்கும் அது கொடுக்கப் படாமல் இருந்தால் அதை சங்கத்திற்குக் கொடுக்கலாம் என்றும் ஆலோசனை கூறியதற்கு பிறகுதான் இது பரிசீலிக்கப்படுகிறது.

Palar, Porandalar and Kudiraiyaru Schemes

* 73. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) the present stage of the scheme for the construction of the Palani-Palar-Porandalar reservoir and the Kudiraiyaru Scheme, Madurai district; and

(*b*) whether the work will commence in the current financial year ?

பாலாறு, பொருந்தலாறு, குதிரையாறு திட்டங்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட பழனி, பாலாறு, பொருந்தலாறு அணைகட்டு திட்டமும், குதிரையாறு திட்டமும் எந்நிலையிலுள்ளன ?

(இ) நடப்பு நிதியாண்டில் வேலை ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: (அ) இத்திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

(இ) இத்திட்டங்கள் இறுதி செய்யப்பட்டு, அவற்றிற்கு ஏற்பளிக்கப்பட்ட பிறகே, அவற்றை நிறைவேற்ற எடுத்துக் கொள்ளும் நிலை ஏற்படும்.

[28th February 1969

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, பழனி, பாலாறு, பொருந்தலாறு திட்டம் என்பது நீண்ட நாட்களாக பரிசீலனையில் இருந்துகொண்டேயிருக்கிறது. அது எத்தனை ஏக்கருக்குப் பயன்படக்கூடிய திட்டம்? எவ்வளவு ரூபாய் அதற்குச் செலவாகும்? குதிரையாறு திட்டம் ஏற்கனவே வேலை நடத்தவேண்டி, மூன்று ஆண்டுகளுக்கு முன்பே சட்டமன்றத்தில் பட்ஜெட்டிலே பணம் ஒதுக்கப்பட்டிருக்கிற விவரமும் கொடுக்கப்பட்டது. இந்த இரண்டு திட்டங்களும் நீண்ட நாட்களாக இருக்கின்றன. எப்போது வேலை ஆரம்பிக்கப்படும் என்று திட்டமாகக் கூறமுடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மதிப்பீட்டுச் செலவு ரூ. 2.56 கோடி பயன்பெறக்கூடிய பரப்பளவு உறுதிப்படுத்தப்படவேண்டிய தற்போதைய ஆயக்கட்டு 10,000 ஏக்கர். புதிய பரப்பளவு 4,500 ஏக்கர். இந்தத் திட்டத்திற்கு ரூ. 2.50 கோடி செலவாகும். இது குறித்து மத்திய நீர் விசை ஆணைக்குழு விவரமாக ஆய்வு செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தினால் பயன்பெறக் கூடிய பகுதி கடந்த காலத்தில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு வறண்ட பின்தங்கிய பகுதியாதலால் இத்திட்டத்தை வருவாய்த்துறை வாரியம் பரிந்துரை செய்துள்ளது.

குதிரையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்று கட்டும் செயற்குறிப்பின் நோக்கம், ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டு, பாசனவசதி அளிக்கப்படாத 1,500 ஏக்கருக்கு பாசன வசதியை உறுதிப்படுத்துவதும், சுமார் 500 ஏக்கரை புதிதாக பாசனத்தின்கீழ் கொண்டுவருவதும் ஆகும் என்று பாசன தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்து கிடைத்தவுடன் இந்த செயல் குறிப்பு உறுதி செய்யப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

Commissioner, Sivakasi Municipality

*74 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) the number of complaints received against the Sivakasi Municipal Commissioner in 1967; and

(b) the action taken thereon by the Government?

சிவகாசி நகராட்சி ஆணையாளர்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிவகாசி நகராட்சி ஆணையாளர் மீது 1967-ல் எத்தனை புகார்கள் வந்தன?

(இ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?